புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
June-2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS

# திருமூலர் வள்ளலார் அறவியல் சிந்தனைகள் –ஓர் ஒப்பீடு

முனைவர் லதாமகேஸ்வரி .அ,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறைத்தலைவர்,
ஸ்ரீதேவிகுமரி மகளிர் கல்லூரி,
குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

ஆய்வுச்சுருக்கம்

காலம்தோறும் இலக்கியங்கள் அந்தந்த காலச்சூழலுக்கேற்றவாறு தோன்றிய வண்ணமே உள்ளன. எனினும் அறம் சார்ந்த இலக்கியங்கள் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் முயற்சியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. சங்க காலத்தில் கள்குடித்தல், புலால் உண்ணுதல், பரத்தையர் தொடர்பு சமூக வழக்கமாக இருந்துள்ளன. விருந்தோம்பல்(பசியாற்றல்) தலையாய அறமாகக் கருதப்பட்டதோடு அறங்கூறும் மன்றங்கள் செயல்பட்டு நீதியைக் காத்து வந்தன. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்கள் கள், புலால், பரத்தமை மூன்றையும் கண்டித்தன. மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுகாலறுகளைப் போதித்தன. அடுத்தடுத்து தோன்றிய காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியங்கள் பெரும்பாலும் அறங்கூறுவனவாகவே எழுதப்பட்டன. இந்த வகையில் கி.பி.5-ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். என்றும் வடநாட்டிலிருந்து தமிழகம் வந்தவர் என்றும் கருதப்படும் திருமூலரால் எழுதப்பட்ட திருமந்திரம் இறை சிந்தனையோடு தமிழர் சமயம், தத்துவம் மற்றும் அறம் கூறும் ஒரு பொது மறையாகத் திகழ்கிறது. இவரைச் சித்தர் என்பர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும் போற்றும் சிறப்பிற்குரியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் (கி.பி.1821) தமிழகத்தில் கடலூர் மாவட்டம் மருதூரில் அவதரித்த வள்ளலாரும் (இராமலிங்கசுவாமி) புரட்சியாளராகவும் சித்துக்கள் செய்வதில் வல்ல சித்தர் என்ற ஆளுமையுடனும் திகழ்ந்தவர். இவர் எழுதிய திருவருட்பாவும் திருவருட்பா உரைநடைப்பகுதியும் வள்ளலாரின் பன்முக புலமையைப் பறைசாற்றுவனவாகும். திருமூலர், வள்ளலார் இருவரும் வாழ்ந்த காலச்சூழல் வேறுபட்டதாக இருந்தாலும் இவர்களின் படைப்புகள் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படும் தத்துவங்களைக் கொண்டு மிளிர்வனவாகும். மனிதன் நலமாக வாழ்வதற்கும் நல்வாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கும் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிமுறைகளையும் தீயவை என்று புறக்கணிக்கப் பட வேண்டிய செயல்முறைகளையும் அறிவுறுத்தி வழி காட்டும் கருத்துப்பெட்டகமாகும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற நோக்குடன் மக்களை நல்வழிப்படுத்த தம் இலக்கியங்கள் வாயிலாக மக்களைச் சிந்திக்க வைத்தனர். ஆன்மநேயம், உண்மையான பக்தி இவைகளை மக்களுக்கு எடுத்தியம்பினர். இவைகள் இவர்களை அருட்கவியாக, ஞானியாக அடையாளம் காட்டின. புத்தர் முதல் காந்தி வரை மக்களுக்கு அறத்தைத் தான் போதித்தனர். மக்கள் அதை ஏற்றுக்கொண்டு பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தார்களா! வாழ்கிறார்களா என்றால் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கலியுகத்தில் கலி என்ற மாயையினால் வாழ்ந்து வரும் மக்கள் மன மாசுகள் நிறைந்து அநீதிகள் இழைத்துச் சுயநலத்திற்காகத் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றனர். இம்மையில் இன்பம் பெற செய்யும் தீய செயல்கள் மறுமையில் துன்பம் தரக்கூடியவை என்ற சிந்தனையின்றி உழன்று திரிகின்றனர். இவர்களைச் செம்மைபடுத்தி நல்வழிப்படுத்த முயன்ற பெரியோர்கள், ஞானிகள், யோகியர், சித்தர்கள், போதனைகள் செய்துவிட்டு மறைந்தனர். பலர் எழுதிவைத்து விட்டு சென்றனர். இந்த வகையில் திருமூலரும், வள்ளலாரும் புரட்சியாளர்கள் என்றாலும்

வள்ளலார் பேச்சோடு எழுத்தோடு நின்றுவிடவில்லை மக்களிடையே அதை நடைமுறைப்படுத்தி செயல்படுத்திடவும் செய்தார். இருவரின் படைப்புகளில் ஒன்றுபடும் சில அறவியல் சிந்தனைகளை ஆய்வுச்செய்வதாக இக்கட்டுரை அமையும்.

முன்னுரை

இலக்கியங்கள் வாழ்க்கையின் எதிரொலிகள். மனித இலட்சியத்தின் உயிர்நாடி. சங்க இலக்கியங்களில் அறவுணர்வுகள் அறக்கருத்துகள் மிகுதியாக உள்ளன; .எனினும் அறத்திற்கென்றே சங்கம் மருவியக்காலத்தில் இலக்கியங்கள் தோன்றின. காலந்தோறும் மிகுதியாக அறநூல்கள் தோற்றம் பெற்றன. மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது மனம். அம் மனத்தைச் செம்மைப்படுத்தி நல்வழிக்காட்டுவனவாகவே அறநூல்கள் விளங்குகின்றன. பண்டைத் தமிழ்மக்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். இம்மை மறுமைக்குத் துணை நிற்கும் அறவியல் கருத்தாக்கம் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டன. இந்த வகையில் கி.பி 5 – ஆம் நூற்றாண்டினர் எனக் கருதப்படும் திருமூலரும் 19 –ஆம் நூற்றாண்டில் அவதரித்த வள்ளலாரும் மக்களுக்குப் போதித்த அறவியல் சிந்தனைகளில் ஒத்தத்தன்மையுள்ள சில கருத்துகள் ஒப்பீட்டு முறையில் ஆய்வுச்செய்யப்படுகிறது.

திருமூலர் வள்ளலார் வாழ்வியல்

திருமூலரைஅட்டமா சித்திகள் பெற்ற தவயோகி என்பர். அவர் திருக்கயிலாய மலையில் இருந்து தென்னாடு வந்து திருஆடுதுறைத் திருத்தலத்தில் எழுந்து அருள்பாலிக்கும் தியாகேசரை வணங்கி அங்குள்ள அரசமரத்தடியில் அமர்ந்து யோக நிட்டை புரிந்து மூவாயிரம் ஆண்டு காலம் வாழ்ந்து; மூவாயிரம் தமிழ்ப்பாடல்களைப் பாடினார். அவையே திருமந்திரம் என்பர். இவர் கி.பி 5 முதல் 7 -ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்டவர் எனக் கூறுவர். ஆனால் சரியான சான்றுகள் கிடைக்கவில்லை. மூலன் என்ற இடையன் உடம்பில் புகுந்து வாழ்ந்ததால் மூலன் எனும் பெயர் பெற்றுத் திருமூலரானார். திருமந்திரப் பாடல்கள் எளிமையானவை, இனிமையானவை, மந்திரம்போல் அமைவதால் திருமந்திரமாயிற்று. மூச்சுப்பயிற்சி பற்றியும் இறையருளில் சிவசிந்தனையில் மனத்தைப் பொருத்திச் சித்தத்துள்ளே சிவனைக் காணலாம் என்கிறார். ஞான நெறியும் யோக நெறியும் சித்த மருத்துவக்கருத்துக்களும் மிகுதியாக உள்ளன.

வள்ளலார் தமிழகத்தில் கடலூர் மாவட்டம் மருதூரில் கி.பி.1823 ஆம் ஆண்டில் அவதரித்தவர். இளமையிலே பள்ளிக் கல்வியில் நாட்டம் இல்லாதவராய் நாளதோறும் சென்னை கந்தக்கோட்ட முருகப்பெருமானை வழிபடுவதையே வழக்கமாகக் கொண்டார். இறைவனால் ஓதாது உணர்ந்திடும் அருள் கிடைக்கப்பெற்றவர். ஒன்பதாம் வயதில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதைத் திருவருட்பாவில் கூறியுள்ளார். சிதம்பரத்தில் இருந்தபோது சிதம்பரம் நடராஜப்பெருமானை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டார். திருமண வாழ்க்கையை மேற்கொண்டாலும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாமல் இருந்தார். வெள்ளாடையை விரும்பி அணிந்தார். இறை அருளால் கல்வி ஞானம் பெற்ற வள்ளலார் பல்துறைப்புலமை மிகுந்தவராய் விளங்கினார். நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், பத்திரிக்கையாசிரியர், ஞானாசிரியர், போதகஆசிரியர், உரைவிளக்க ஆசிரியர் எனப்புலமை பெற்று விளங்கியதுடன் எல்லாவற்றுக்கும் மேலாக ஆறு திருமுறைகளையும் படைத்த அருட்கவிஞராகவும்; பலவிதமான மூலிகை மருந்துகளைப் பற்றியும் அவற்றின் குணங்களை அறிந்த சித்த மருத்துவராகவும் விளங்கினார். சித்துக்கள் செய்வதிலும் வல்லமை பெற்றிருந்தார். இவர் படைப்புகள் யோகநெறி, ஞானநெறி, பக்திநெறி, ஜீவகாருண்ய சிந்தனைகள், சித்தமருத்துவ கருத்துக்கள் நிறைந்த கருவூலம் எனலாம்.

இருவரும் அறிவை முன்னிலைப்படுத்தியும் அடுத்தவர்க்கு உதவிச்செய்து வாழ்வதைப்பற்றியும் மிகுதியாகப் பாடியுள்ளனர். இவர்களின்படைப்புகளில் உள்ள கருத்துக்களில் சில எல்லாக் காலத்துக்கும் பொருந்துவன.

கொல்லாமை

உயிர்களைக் கொல்லா நெறியைச் சமயங்கள் வலியுறுத்துகின்றன. இறைவழிபாட்டில் உயிர்ப்பலியும் நரமாமிசம் கொடுக்கும் வழக்கமும் பண்டுதொட்டே இருந்ததை ரிக்வேதம்

*குறிப்பிடுகிறது. சங்ககால மக்களிடம் உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளதை, திருமுருகாற்றுப்படை வழி அறியலாம்.1 பசித்துன்பத்தை விடவும் கொடியது கொலை செய்வதாகும். ''கொல்லாமை நன்று'' 2 என்று சிறுபஞ்ச மூலம் கூறுகிறது.*

*புல்லைத்தின்றுதான் பூச்சியும் புழுக்களும் வளரும்; புழுக்களை அழித்துதான் வண்டினங்கள் வாழும்; வண்டினங்களை உண்டு தான் பறவைகள் வாழும்; பறவைகளின் உடல்கள் தான் விலங்குகளுக்கு உணவாகும்; விலங்குகளையும் பறவைகளையும் அழித்து உண்பதே மனிதனின் பிரதான விருந்து உணவாகும்.மனிதனின் உடல்தான் புழுக்கள் பிறக்கும் கருவரையாகும் . ஒன்றை அழித்து மற்றொன்று வாழ்தல் என்பது இயற்கையின் நியதி என்ற நிலையில் அதனை உணவுச்சங்கிலி என்கிறது அறிவியல். இதில் ஆன்றோர்கள் கூறும் கொல்லாமை புலால் உண்ணாமை என்பது மனித சமுதாயத்திற்குச் சொல்லப்பட்டவையாகும். புலால் உண்பதற்காக மட்டுமின்றி சிறுதெய்வங்களுக்குப் பலி என்ற பெயரில் நடக்கும் பக்திக்கொலை, பகை காரணமாக நடைபெறும் கொலை, பேராசை, களவு, காமம் முதலியவைகளுக்காக நடத்தப்பெறும் கொலைகள், நாட்டுக்கு நாடு போர் நடக்கும்போது ஆயிரக்கணக்கானவர் கொலை செய்யப்படுதல் இவையாவும் தடுக்கப்பட வேண்டும் என்ற பொது நோக்கிலே திருமூலரும் வள்ளலாரும் மனிதர்களுக்கே கொல்லாமையை வலியுறுத்துகின்றனர். ஆனால் இன்று மனிதக்கொலைகளே வெகு சாதுர்யமாகச் சமுதாயத்தில் அரங்கேறி வருவது இயல்பாகிவிட்டது.*

*இறைவனைப் பூசிக்க உகந்தவர்கள் இன்னொரு உயிரைக் கொல்லாதவர்களே என்கிறார் திருமூலர் (பா.197). கொல், வெட்டு, குத்து என்று வெறிகொண்டு திரியும் கொடியவர்களை எமனின் தூதர்கள் பாசக்கயிற்றால் கட்டிக் கொண்டு போய்ச் செல்! நில்! என்று அதட்டி மிரட்டி நகரக்தீயில் தள்ளி நிறுத்துவர் என்பதை,*

*'' கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை*
*வல்லடிக் காரர் வலிக்கயிற்றால் கட்டிச்*
*செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை*
*நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே''*
*(திருமந்திரம் பா.198)*

*எனும் பாடலில் உணர்த்துகிறார்.*

*வள்ளலாரும் கொல்லாமைத் தொழிலைச் செய்யாதவரே இறைவனின் குலம் ஆகின்றமையை,*

*''கொலைபுரிவார் தவிரமற்றை எல்லாரும் நினது*
*குலத்தாரே'' (திரு.பா.4159)*

*என்றும், கொலை செயல்களில்லாத நற்குணத்தையுடைய பெரியோர்களோடு கூடி உறவாடும் பெருமானே (திரு.பா.4107) என்றும்; கொல்லாமையாகிய நல்லறத்தை மனத்திற்கொள்ளாதவரைச் சேராதவன் இறைவன் (திரு.பா.3953) என்கிறார்.*

*உயிர்க்கொலை செய்பவர் நரகம் அடைவர் என்பதை மனுநிதீச் சோழனின் வாயிலாக ''உயிர்களை இறப்பிப்பதற்கும் பிறப்பிப்பதற்கும் இறைவனே உரியவர் என்றெண்ணாமல் ஆகாமியத்தால் கொலை செய்வதனால் மீளாநரகம் நேருமென்றறிந்து கொள்வீர் என்ற செய்தி திருவருட்பா உரைநடைப்பகுதியில் இடம்பெற்றுள்ளது (திரு.உ.ப.34). மனுநீதிச்சோழன் பசுவின் கன்று இறந்து கிடந்த இடத்தில் தன்மகனைப் படுக்க வைத்து மகன்மேல் தேர் ஏற்றிக் கொன்றதன் மூலம் (திரு.உ.ப.45) உயிர்க்கொலை புரிவோரை அழிப்பதே நீதி என்ற அறம் இங்கு வலியுறுத்தப்படுவதை உணரலாம்.*

*புலால் மறுத்தல்*

*உயிர்களைக் கொன்று உண்ணும் வழக்கத்தை அறநூல்கள் கண்டித்துள்ளன.*

*''தன்னூண் பெருக்கத்திற்குத் தான்பிறி தூனுண்பான்*
*எங்ஙனம் ஆளும் அருள்'' 3*

*என்கிறது திருக்குறள் வளையாபதி,*

*'' உயிர்க ளோம்புமின் ஊன்விழைந் துண்ணன் மின்''4 எனக் கூறக்காணலாம்.*

*திருமூலரும் உயிர்களுக்குத் தீமை விளைவிக்கும் தீயதான இறைச்சி உணவை விரும்பி உண்ணும் கீழ் மக்களின் உடலை எமதூதர்கள் இழுத்துக் கொண்டு போய் கரையான் போல அரித்துக் கொல்லப் பற்றி எரியும் நரக நெருப்பில் தள்ளுவர் என்கிறார். இதை,*

*“பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*
*எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்*
*செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தின்*
*மல்லாக்கத் தள்ளி மறித்துவைப்பாரே”*

*(திருமந்திரம் .பா.199)*

*எனும் பாடலால் தெளியலாம். உயிர்க்கொலை செய்பவரும் புலால் உண்பவரும் நரகம் செல்வர் என்பதை திருமூலர் உறுதிபட கூறுகிறார்.*

*வள்ளலார் புலால் உண்போரைக் கண்டு உள்ளம் மயங்கி நடுங்கியதை,*

*“ வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு*
*மயங்கிஉள் நடுங்கி … … … … …..”*

*(திரு.பா.3456)*

*என்பதால் அறியலாம்.*

*இறைவனுக்கு உகந்தவர்கள் புலால் உண்ணாதவர்களே புலால் உண்பவர் புற இனத்தார் அவர்கள் சன்மார்க்கி ஆகார் என்பதே வள்ளலாரின் கொள்கை புலால் உண்போரும் உண்ணும் கருத்துடையவருகம். ஞானி ஆகமாட்டார் என்கிறார் (திரு.பா.3027). புலை நெறியைப் பின்பற்றுவோர் சுடுகாட்டுப் பிணங்களுக்கு ஒப்பாவர் என்று வள்ளலார் வருந்தியுரைத்துள்ளமையையும் அறியலாம் (திரு.பா.5332).*

*புலை, கொலை தவிர்த்தவர்களே சன்மார்க்க சங்கத்தில் சேரமுடியும் என்று வலியுறுத்திய வள்ளலார் அதற்கேற்ப சன்மார்க்கசங்கம், ஞானசபை, தருமச்சாலை, சித்திவளாகம் இவைகளில் புலால் உண்பவர் உள்ளே வரக்கூடாது என்ற அறிவிப்பு பலகையும் வைத்துள்ளமை அவரின் எதிர்ப்பு தன்மையின் உன்னத நிலையைப் பறைசாற்றுவனாக உள்ளது.*

*எல்லா உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணுதல்*

*மக்களை மக்கள் நேசிப்பது “மனிதநேயம்” மக்களை மட்டும் அல்லாமல் அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டுவது “ஆன்மநேயம்” ஓரறிவுமுதல் ஆரறிவு வரை உள்ள உயிர்களையெல்லாம் ஒன்று போல் எண்ணுவதே ஆன்மநேய ஒருமைப்பாடு ஆகும். ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் சங்க இலக்கியம் முதல் இன்று வரை பலராலும் கூறப்பட்டுள்ளன.*

*திருமூலர் எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையை உணர்ந்து எல்லா உயிர்களிடமும் அன்பும் இரக்கமும் கொண்டு மகிழ்ந்திருப்பவர் பரம்பொருளின் திருவடி நீழலைக் காணும் பேறு பெறுவர். இறையருள் அவர்களுக்குத் தான் கிடைக்கும் என்கிறார். இதை,*

*”கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்*
*துணிந்தவர் ஈசன் துறக்கமது ஆள்வர்”*

*(திருமந்திரம்.பா.266)*

*எனும் வரிகளால் தெளியலாம்.*

*வள்ளலார் ஓரறிவு உயிராகிய பயிர் வாடியதைக் கண்டு தான் வாடியதைத் திருவருட்பாவில் கூறியுள்ளார். உலகில் உள்ள அனைத்து உயிர்களையும் தம்முயிர் போல் எண்ணி உபகரிக்கின்றவர் செய்யும் செயல்கள் அனைத்தும் திருவருளின் செயலாகக் கொள்கிறார். (திரு.பா.5296)*

*எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணுபவரின் உள்ளமே இறைவன் நடம்புரியும் இடமாக விளங்குவதை,*

*“ எத்துணையும் பேதமுறா எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே*
*ஒத்துரிமை உடையவராய் உவக்கினறார் யாவர்அவர் உளந்தான் சுத்த சித்துருவாய்*
*எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான் தெரிந்தேன் அந்த*
*வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன் சிந்தைமிக விழைந்த தாலோ”*

*(திரு.பா.5297)*

*என்பார். இக்கருத்திற்கு அரண்சேர்க்கும் வகையில்.*

*“இவ்வுலகின் எவ்வுயிரும் எம்முயிரின் நேர் என்று*
*அவ்வியம் அகன்று அருள்சுரந்து உயிர்வளர்க்கும்*
*செவ்வினையின் நின்றவர் திருத்தடி பணிந்து உன்*

எவ்வினை கடந்துயிர் விளங்குவிறல் வேலோய்'' [5]

எனும் யசோதரக் காப்பியக் கருத்து அமைந்துள்ளது ஒப்பு நோக்கதக்கது.

பசிப்பிணி போக்குதலின் சிறப்பு

நிலவுடைமைச் சமுதாயத் தோற்றம் காரணமாக ஏழை பணக்காரன் என்ற பிரிவினையால் ஏழைகள் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டனர். வறுமை நோயில் தவித்தனர். மனிதர்களை மிருகங்களின் நிலைக்குக் கொண்டு சென்றது பசியின்கொடுமை; பசியானது உலகத்தில் ஒரு கொடிய நோயாக விளங்கி பிணியாக மாறியது.

வள்ளுவர்,

''அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி'' 6

என்கிறார். பசிக்கொடுமையை ஔவையார்,

''மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் – பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்'' 7

எனப் பாடியுள்ளார்.

திருமூலர், குறையற்ற நிறை உடைய இறைவனுக்கும், மேலான ஆசிரியருக்கும் காம குரோத ஆசைகளை விட்டொழிந்தவர்களுக்கும் ஒன்றைக்கொடுப்பதும், கொடுக்கச் சொல்வதும், கொடுத்துதவ அறிவுரைகூறுவதும் மிக நல்ல செயல்களாகும். இதைச் செய்கிறவன் நரகத்திற்குச் செல்லமாட்டான் (திருமந்திரம் .பா.507) என்று கூறுவதிலிருந்து; யார் யாருக்குப் பொருள் கொடுக்கலாம் என்ற வரையறை வைத்திருப்பது அன்றைய சமுதாய நிலையை உணரவைப்பனவாகும்.யாருக்குப் பொருள் கொடுக்கலாம் என்ற வரையறை வைத்த திருமூலர் ''பசியைப் பிணியாகப்'' பார்க்கிறார். அதனால் கட்டுப்பாட்டைத் தளர்த்தி எல்லோருக்கும் கொடுத்து உதவுங்கள் என்கிறார். இதை,

''ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே''

(திருமந்திரம். பா.250)

எனும் பாடலால் அறியலாம்.

வினைப்பயனால் வந்த மனிதப்பிறவியும். வாழ்வும் பெரிய கடல் போன்றது. அதில் வீழ்ந்து நாம் திளைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பிறவியாகிய கடலை விட்டொழிய தோணிபோல் உதவுவது ஒவ்வொருவரும் இல்லறத்தில் இருந்து செய்யும் தான தருமங்களே என்கிறார் (திருமந்திரம் பா. 258)

மேலும், மிகுந்த மழையோ, புயலோ வெள்ளமோ எதுவாக இருந்தாலும் நல்லறச் செயல்களை விடாது செய்ய வேண்டும் (திருமந்திரம் .பா.72) தருமம் செய்வதற்குப் பெரிதாகப் பொருள் வசதி, ஆள்துணை இருந்தால் தான் முடியும் என்று வீணே காலத்தைக் கழிக்காதீர்கள் உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள் என்று

அறிவுறுத்துவதை,

''யாவர்க்கு மாம்இறை வற்குஒரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்குஒரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே''

(திருமந்திரம் பா.252)

எனும் பாடலால் அறியலாம்.

பந்தம், பாசங்களை விட்டொழிந்த ஞானிகளுக்கு உண்ண உணவளிப்பதே சிறந்த தருமம்; அப்படிப்பட்ட ஞானிகள் எங்காவது தியானத்தில் இருப்பதைக் கண்டால் அழைத்து வந்து உண்ணச் செய்யுங்கள் பெரும் பயனை அடையலாம் (திருமந்திரம் பா.253) என்கிறார்.

*திருமூலர் பொருளில்லாதவர்க்குப் பொருள் கொடுத்து உதவ அறிவுரை வழங்கினார் என்றால் வள்ளலார் பசியின் துன்பத்தைத் தானே உணர்ந்து அனுபவித்து பொருள் இருந்தும் கொடுத்து உதவ மனமில்லாத மனிதர்களின் இழிநிலையைத்தன் படைப்பில் பதிவு செய்துள்ளதோடு பசிதீர்க்கும் அறச்சாலையாக வடலூரில் தருமச்சாலை தொடங்கி செயல்படுத்தியமைக் குறிப்பிடத்தக்கது.*

*வள்ளலார் வாழ்ந்த 19-ம் நூற்றாண்டைப் பஞ்ச நூற்றாண்டு என்பர். வறட்சி, வெள்ளப்பெருக்கு, பருவமழை குறைவு போன்ற காரணத்தினால் விவசாயிகளும் எழை தொழிலாளர்களும் பாதிப்புக்குள்ளாயிருந்தனர். தமிழகத்தில் கி.பி.1853, 1854, 1866 ஆகிய ஆண்டுகளில் தொடர்ந்து ஏற்பட்ட பஞ்சங்களின் விளைவாகப் பசியும் பட்டினிச் சாவும் ஏற்பட்டன"8பசியின் துன்பத்தை அனுபவித்து உணர்ந்த வள்ளலார் பசியால் வாடும் மக்களைக் கண்டு மனம்வெதும்பி பசியைப் போக்க முனைந்தவர்.வள்ளலார் பசித்து வருந்திய போதெல்லாம் இறைவனும் பசியுற்றதுபோல் வருந்தி உணவு அளித்துப் பசியும் களைப்பும் தோன்றாதவாறு செய்தான் (திரு.பா.4138). திரு வொற்றியூர் சென்று வழிபட்டு வந்த வள்ளலார் காலதாமதம் ஆகியதால் தம் வீட்டுத் திண்ணையில் பசியோடு படுத்துத் தூங்க ஒற்றியூர் வடிவுடைய நாயகி வள்ளலாரின் அண்ணியார் உருவில் வந்து உணவு கொடுத்தார். தனக்கு உணவு அளித்தது அண்ணியார் அல்லள், இறைவியே என்பதை உணர்ந்து,*

*"ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ என்றெனையங்கெழுப்பி*
*உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாந் தாயே"*
*(திரு.பா.4132)*

*எனப் பாடியுள்ளார்.*

*பொருளாளர் உண்ணும் போது வறியாளர் பசியால் உள்ளம் வருந்த அதனால் தான் வருந்தியதையும் (திரு.பா.5382) பசி என்கிற பிணியால் உலக மக்களின் உள்ளம் வெதும்பிய வெதுப்பைப் பார்த்த போதெல்லாம் பயந்து பதைபதைத்ததையும் பதிவு செய்துள்ளார். (திரு.பா.3419) பசித்து இருப்பவர்களைப் பற்றிப் பிறர் கூறக் கேட்டும் நடுக்குற்றதை,*

*"பட்டினி உற்றோர் பசித்தனர் களையால்*
*பரதவிக்கின்றனர் என்றே*
*ஒட்டிய பிறரால் கேட்டபோ தெல்லாம்*
*உளம்பகீர் எனநடுக் குற்றேன்*
*(திரு.பா.3431)*

*என்று குறிப்பிட்டுள்ளார்.*

*பிற உயிர்களிடம் கருணை காட்டி செயல்பட வேண்டும் என்பதன் முக்கியத்துவத்தைப்பற்றி வள்ளலாருக்கு முன்பே திருவள்ளுவர், மணிமேகலை நூல் எழுதிய சாத்தனார், திருமூலர், தாயுமானவர், சமண, பௌத்த சமயப் பெரியோர்கள், பக்தி இயக்ககால ஆன்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர். என்றாலும் வள்ளலார் பசியின் துன்பத்தைத் தானே அனுபவித்து உணர்ந்து இத்தகைய அவலநிலை தான் பல பழிபாவச் செயல்கள் செய்ய மக்கள் மனதைத் திசைதிருப்புவது என்பதை உணர்ந்து மக்களின் பசித்துன்பத்தை அகற்றுவதே தலையாய அறமாகக் கொண்டார். இதன் செயல்பாடே 23-05-1867 –இல் வடலூரில் தருமச்சாலை தொடங்கி நடைமுறைப்படுத்தியமை எனலாம்.*

*இன்றும் சாதி, மத, இன, மொழி , நிற வேறுபாடு இல்லாமல் வாழ்க்கையில் நலிவுற்றோர், தனிமைப்படுத்தப்பட்டோர், பிணியுற்றோர், அவயங்களில் குறைபாடு உள்ளோர், முதியவர்கள் என்போர் அங்குத் தங்கி மூன்று வேளையும் உணவு உண்டு பசியைப் போக்கி ஞானசபை வழிபாட்டில் கலந்து கொண்டு இறைப்பற்றுடன் வாழ்ந்து வருகின்றனர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏழை மக்களின் பசிபோக்க வந்த மணிமேகலையே வள்ளலார் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.*

*ஈகைக் குணம் இல்லா மனிதர்கள்*

*பொருள் இல்லை என்று வருபவர்க்கு இல்லை என்று கூறாது அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துதவும் அறச்செயலே ஈகையாகும். இம்மையில் செய்யும் இவ்அறச் செயலே மறுமைக்குத் துணையாகயிருப்பது என்பதை உணர்ந்தும் வறியவர்க்குக் கொடுத்துதவும் இரக்கமில்லா சுயநல வாதிகள் இச்சமூகத்தில் என்றும் தோன்றிய வண்ணமே உள்ளனர்.*

இவர்களை எச்சரிக்கும் விதமான கருத்துக்கள் திரு மூலர், வள்ளலார் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

செல்வம் சேர்த்து வைத்திருப்பவன் வறியவர்களுக்குக் கொடுத்துதவும் குணம் இல்லாதிருந்தால் அவனுடைய செல்வம் எட்டிப்பழம் போன்று யாருக்கும் பயன்படாமல் பயனற்றதாகிவிடும் என்கிறார் திருமூலர்(திருமூலர்.பா.260). சாறு பிழிந்த சக்கை போலத் தங்களின் பெருந்துன்பத்திற்கு இடமான உடல், மெலிந்து தளர்ந்து ஒருநாள் அழிந்தும் போகும் இதையெல்லாம் தெரிந்தும் உயிர் உள்ளபோதே நல்லறத்தைச் செய்யாமல் வீணே காலம் கழிக்கின்றனர்; இவர்கள் சிவலோகத்தின் நிழலைக் கூடத் தரிசிக்க முடியாது என்கிறார் (திருமூலர்.பா.261,262). வாழ்வில் இன்பம் துன்பம் என இரண்டும் இருப்பது அவரவர் முற்பிறவியிலே செய்த நன்மை தீமைகளால் விளைந்ததாகும். முற்பிறப்பில் நல்லறம் செய்தவர்களே இப்பிறப்பில் இன்பமாக வாழ்கிறார்கள் என்பதைக் கண்டும் பிறருக்குத் கொடுத்துதவும் அன்புள்ளம் இல்லாதவர்களாக வாழ்கின்றனர் என்று தன் வேதனையைப் பதிவுச் செய்துள்ளார். (திருமந்திரம்.பா.267)

அறச்சிந்தனையின்றி நடுவுநிலைமைத் தவறித் தீமை செய்பவர்கள் இன்பம் பெற இறைவன் அனுமதிக்கமாட்டார் எனவே இல்லாதவர்களுக்கு இயன்றதைக் கொடுத்துதவுங்கள் என்பார் (திருமந்திரம் பா.268). மேலும் ஈகை குணம் இல்லாதவர்கள் பலவிதமான நோய்களால் துன்பமுறுவர் என்று எச்சரிக்கிறார். இதை,

"இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்"

(திருமந்திரம் .பா.263)

எனும் பாடலடிகள் புலப்படுத்தும்

வள்ளலார் பொருளாதார ஏற்றத்தால் ஆடம்பரத்துடன் வாழக்கூடிய மக்கள் பசியால் வருந்தும் ஏழைகளைப் பார்ப்பதற்கும் பொருள் கொடுப்பதற்கும் விரும்பாதவர்கள் என்பதை,

"பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்"

(திரு.பா.5556)

என்றும்,

"உடுத்திலேம் சிறிதும் உண்டிலேம் எனவந்
தோதிய வறிஞருக் கேதும்
கொடுத்திலேன் கொடுக்கும் குறிப்பிலேன்"

(திரு.பா.3352)

எனக் கருணை இன்றி வாழ்வோரைச் சாடுகின்றார்.

பசியால் வாடுவோருக்கு எதையும் கொடுக்காமல் மறுத்தலையும் (திரு.பா.5558) இல்லாதவர்களுக்குப் பிச்சையிட்டு உண்ணத் தயங்குவதையும் (திரு.பா.5560), பழங்கஞ்சியாக இருந்தாலும் அதனைக் கொடுக்கவும் மனம் இல்லாமல் இருப்பதையும் (திரு.பா.5561) பசித்து வருபவர்களின் சோர்ந்த முகத்தைப் பார்த்து ஒரு பிடிச்சோறு கொடுக்க இசைவு இல்லாமல் இருப்பதையும் (திரு.பா.5563) திருவருட்பாவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனுநீதிச் சோழன் தன் மகனுக்கு நேர்ந்த துன்பத்திற்குக் காரணம் முற்பிறவியில் தான் பிறருக்கு உதவாமல் இருந்தேனோ என்கிறார்.

"பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ
இரப்போர்க்குப் பிச்சை இல்லை என்றேனோ

(திரு.உ.ப.26) என்ற செய்தியை வள்ளலார் எடுத்தாண்டு துன்பத்திற்குக் காரணம் பிறருக்கு உதவாமை ஈயாமை என்பார்.

பசியின் கொடுமை

பசிவந்தால் பத்தும் பறந்து போகும் என்பது ஆன்றோர் வாக்கு. மணிமேகலைபசியின் கொடுமையயை,

"குடிபிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது'' 9

எனச் சுட்டியுள்ளமையைக் காணலாம்.

திருமூலரும் வறுமையில் வாடும் மக்களை நடைபிணமாகவே உருவகிக்கிறார். செல்வம் இல்லாத போது உறவினர்கள் விலகிவிடுவதும், நல்லநாள், விழாக்கள், எதுவும் இவர்கள் கொண்டாடுவதில்லை ; இத்தகைய மக்களுக்குப் பொருள் கொடுத்து உதவ யாருமே முன்வருவதில்லை "பணம் இல்லாதவன் பிணம்" என்பதற்கேற்ப இவர்களின் வாழ்க்கை அமைந்திருப்பதை,

"புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப் பட்டார்களும் அன்பிலர் ஆனார்
கொடைஇல்லை கோள்இல்லை கொண்டாட்டம் இல்லை
நடைஇல்லை நாட்டில் இயங்குகின் றார்கட்கே"

(திருமந்திரம்.பா.209)

எனும் பாடலால் தெளியலாம்.

வள்ளலார், பசியினால் வாடிய மக்களைக் கண்டு வருந்தியதை,

"- - -- - - - - - - - - பசியினால் இளைத்தே
வீடுதோறிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன் "

(திரு.பா.3471)

எனும் பாடல் வரிகள் உணாத்தும்.

பசிக்கொடுமையால் உயிர்களில் ஏற்படும் குணநலமாற்றம் உடல் நலமாற்றம் ஆகியவற்றை வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

குணநலமாற்றம்

பசிவந்துவிட்டால் கணவன், மனைவி, குழந்தைகள் பெற்றோர் ஒருவரை ஒருவர் விற்று கூடப் பசியைத் தணித்துக் கொள்ள எண்ணுவர். பாமரன் முதல் அரசர்வரை பசித்துன்பம் வந்தபோது அவர்களுடைய நிலையிலிருந்து கீழே இறங்கி எத்தகைய அழிவையும் பொருட்படுத்தாமல் பசித்துன்பத்தைப் போக்கிக் கொள்ள முயல்வர். மத, சமய ஆசாரங்களில் முழுமையாக மூழ்கிக் கிடக்கும் ஆசாரியர்கள் கூட பசித்துன்பம் வந்தபோது ஆசாரத்தைக் கைவிட்டு ஆகாரத்தை நாடுவர் (திரு.உ.பக் -67-68) என்றுரைத்துள்ளார்.

உடல்நலமாற்றம்

மனிதனுக்கு நரகவேதனை , சனனவேதனை, மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளும் கூடிய முடிந்த வேதனையே பசிவேதனை என்று குறிப்பிட்டுள்ளார். "சீவர்களுக்குப் பசிஅதிகரித்த காலத்தில் ஜீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகிறது. ஐம்புலன்களும் பொறிகளும் கெடுகின்றன ……………………………………………......
உயிரிழந்து விடுவதற்கு மிகவும் சமீபித்த அடையாளங்களும், அனுபவங்களும் தோன்றுகின்றன. பசியினால் பல வகையான அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக்கு எல்லாம் பொதுவாகவே இருக்கிறது. பசியானது மனிதனை மரணவாயிலில் கொண்டு தள்ளும் அவத்தையை ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் விவரித்துள்ளார்(திரு.உ.பக் 67-68).

பசிதீர்ப்போர் அடையும் பேறுகள்

மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசன் தொண்டு. உயிர் இரக்கத்தை, தயையைக் கடைபிடிக்காதவர்கள் செய்கின்ற தெய்வ வழிபாடுகள், யோகம் , தவம், விரதம், செபம், தியானம் அனைத்தும் பயனற்றவை என்பதே ஆன்றோர் வாக்கு.திருமுலர் தருமச் சிந்தனையுடன் வறியவர்களுக்குப் பசியாற்றி, தானம் தர்மம் செய்து வாழ்பவர்களுடனே இறைவன் உறவுடையவனாக இருப்பான். இவர்களுக்கு உயிரை அச்சுறுத்தும் இடி மின்னல் தாக்குதல், கழுத்துக்கட்டி, பிளவை ஆகிய நோய்கள் அணுகாது என்கிறார். இதை,

"- - - - - - - - - - - - - - - - - -- - -- -

உருமிடி நாகம் உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே"

(திருமந்திரம் பா.263)

எனும் அடியால் உணரலாம்.

வள்ளலாரும் சீவகாருண்ய ஒழுக்கத்தில் நின்று பசி ஆற்றுவித்தலைச் செய்வோர் கொடிய நோய் நீக்கம் பெறுவர், மகப்பேறு அற்றோருக்கு அது வாய்க்கும் ; இறப்பு நீங்கி நீண்ட வாழ்வு பெறுவர் ; கல்வி, அறிவு, செல்வம். போகம் பெறுவர், தேவர், முனிவர், சித்தர், யோகர் முதலிய யாவராலும் வணங்கப்பெறும் சிறப்படையவர்கள் ஆவார்கள் இது கடவுள் சாட்சியாகச் சொல்லப்படுகின்றது என்பார்.(திரு.உ.பக்.73-75)

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் " 10

எனும் குறள் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது .

முக்திக்குவழி

மறுமையில் இறைவன் திருவடியைச் சேர்வதே முக்தி என்பர்.இறைவன் திருவடியைச் சேர இம்மையில் சொல், செயல், சிந்தனை, அறம் சார்ந்ததாக இருக்கவேண்டும். திருமூலர் நல்லறச் செயல்களைச் செய்யாதவர்கள் சிவப்பரம் பொருளின் திருவடியைப் போற்றும் பக்தி வழியை அறியாதவர்கள் இவர்கள் சிவலோகத்தின் நிழலைக்கூட, தரிசிக்க முடியாதவர்கள் (திருமந்திரம்.பா.262) என்றும் எல்லா உயிர்களிடமும் அன்பும் இரக்கமும் கொண்டு மகிழ்ந்திருப்பவர் பரம் பொருளின் திருவடிநிழலைக் காணும்பேறு பெறுவர் (திருமந்திரம், பா.266) அறவழியிலே நின்று ஒருவருக்கு ஒன்றைக் கொடுத்து உதவிய ஈகையே உற்ற உயிர்த்துணை இதுவே பரம் பொருள்வாழும் பேரின்ப வீட்டை அடைய வைக்கும் வழித்தடம் (திருமந்திரம் பா.259) என்கிறார்.

வள்ளலார் திருவொற்றியூர் சிவனின் திருவருள் பெறுவதே முக்திக்கு வழியாகும் என்பதை திருவருட்பாவில், முக்தியுபாயம் (திரு.பா.1350-1359) என்ற பகுதியில் வலியுறுத்தியுள்ளார்.

" முக்தி வேண்டுமேல் பக்திவேண்டுமால்
சத்தி யம்இது புத்தி நெஞ்சமே"

(திரு.பா.1352)

எனும் பாடலைச் சான்றாகக் கொள்ளலாம்.

திருவருட்பா உரைநடையில் இடம்பெறும் சீவகாருண்ய ஒழுக்கத்தில், பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசிவருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருண்யம் என்ற திறவு கோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல்வீட்டை அடையமுடியும் -----------சரியை, கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பக்தர்களும் இருடிகளும் யோகிகளும் சித்தர்களும் ஞானிகளும் சீவகாருணியம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளவில்லை யென்றால் மோட்சத்தை அடையமாட்டார்கள்…………சீவகாருணியமே கடவுள் வழிபாடு என்கிறார் (திரு.உ.பக் -70-71).

மறுமலர்ச்சி சமுதாயம் மலர!

காலம்காலமாக ஆன்றோர்கள் மக்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்கங்களை அறச்சிந்தனைகளை எடுத்தியம்பி மக்களைச்சீர்திருத்த அறிவுரைகள் வழங்கி வருகின்றனர். மக்களும் அவ் அறிவுரைகளை ஏற்று தம்மை மேன்மைபடுத்திக் கொண்டனர். என்றாலும் சில மறச்செயல்கள் சமுதாயத்தில் வேரூன்றியுள்ளமையைக் காணலாம். "கலி" யென்ற மாயையில் கட்டுண்டு வாழுகின்ற மக்கள் "மறுமை" என்பது உண்டு என்ற சிந்தனையின்றி தன் சுயநலத்திற்காகப் பல அநீதிகளைச் செய்து வருகின்றனர். பொருளாசையினால் பெற்றோர்களைப் பிள்ளைகளே கொல்லும் கொடுமை, கொள்ளை, காம குரோதசெயல்கள், குடும்பத்தினரிடையே பகைமை இன்று மலிந்து விட்டன. "கலி" என்பது மனதில் எழக்கூடிய மாயநினைவாகிய மாய்மாலம் ஆகும் மனதை ஒருமுகப்படுத்தி இறை சிந்தனையோடு இருந்தால் கலியானது தன்னைந்தன்னாலோ அழிந்து விடும் என்கிறது அகிலத்திரட்டு அம்மானை இதை,

*"கலியென்றால் எலியல்லவே கணையாளி வேண்டாமே*
*வலிமாய நினைவு மாய்மாலம் என்மகனே*
*மானமாக விருந்தால் மாளுங்கலி தன்னாலே" 11*

*எனக்கூறுகிறது.*

*கலியென்ற மனமாயையினால் மக்கள் பல தவறுகளைக் செய்வர் என்பதை அகிலத்திரட்டு அம்மானையும் அருள்நூலும் முன்வைக்கின்றன.*

*"வெட்டியும் குத்தியும் கீறிக்கொண்டும் சாவார்" ; கொலைகள் மிகும்;12 " தாயை மகன் கொல்லுவான்; வறுமையினால் தவறான வழியில் செல்வர்" 13 என்று பொருளாசையினால் ஏற்படும் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளதை உணரலாம். இன்று பொருளுக்காக மனிதக்கொலைகள், கொள்ளைகள் ஏராளமாக நடைபெறுவதும்; புலால் உணவின்றி விருந்தோம்பல் இல்லை என்ற சங்ககாலத்து நிலையும் சமூக வழக்கமாகிவிட்டது. ஆடம்பரமான வாழ்க்கையை விரும்புபவர்கள் பொருள் சேர்க்கத் தவறான பாதையையே தேர்ந்தெடுக்கின்றனர். இந்நிலைமாறி எல்லோரும் ஓரினமாக இன்புற்றிருக்கும் சமத்துவ சமுதாயம் மலர வேண்டுமெனில் வைகுண்டசுவாமிகள் கூறும் கலியுகம் அழிந்து தர்மயுகம் தோன்ற வேண்டும் அவ்யுகத்தில் ,*

*"சாத்திரம் வேதம் சமயம் ஒன்றாய் நின்றிலங்கும்*
*… … … … … … … … … … … … … … … … … … … … … … .*
*ஒக்க வொருயினம்போல் உவர்திருந்து வாழ்வார் காண்*
*… … … … … … … … … … … … … … … … … … … … … … ..*
*மண்ணெல்லாம் தர்ம வயல்போல் விளைந்திருக்கும்*
*தர்ம புவியிலுள்ள தண்ணீர் கலைக்கியானம்*
*நன்மைவெள்ளங் காட்ட நாடுங் கருணை வெள்ளம்"14*

*இப்படியே தர்மபதி இராச்சியமொன்று உண்டாக்கி என்பதற்கேற்ப எல்லோரும் எல்லாம் பெற்று ஓரினம் போல் மகிழ்ச்சியுடன் வாழ்வர் என்கிறார்.*

*மகாகவி பாரதியோகலியுகம் அழிந்து மறுமலர்ச்சி சமுதாயமாகக் கிரேதா யுகம் மீண்டும் மலரவேண்டும் என்பார். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் சமமாக வாழ்ந்த பொற்காலத்தை மீண்டும் கொண்டு வருவேன் என்ற தன் ஆவேசத்தை,*

*"பொய்க்குங் கலியை நான்கொன்று*
*பூலோகத்தார் கண்முன்னே*
*மெய்க்குங்கிருத யுகத்தினையே*
*கொணர்வேன், தெய்வ விதியிஃதே"15*

*என்று சூளுரைத்து மறுமலர்ச்சி சமுதாயம் எழுச்சியுற புரட்சி விதையை விதைத்து சென்றார்.*

*கலியுகம் அநீதிகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு யுகமாகவே கண்முன் காட்சியளிக்கிறது. இங்கு ஆன்றோர்கள் வழிகாட்டும் அறம் நிலைபெற்று சமத்துவ சமுதாயம் மலரும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமல்ல.வைகுண்டசுவாமி, மகாகவி பாரதியின் எண்ணங்கள் நிறைவேறினால் அறம் நிலைபெறும் சமத்துவ சமுதாயம் மலரும்.*

*முடிவுரை*

*திருமூலரும் வள்ளலாரும் வெவ்வேறு நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்றாலும் அவர்கள் மக்களுக்கு அறிவுறுத்திய அறவியல் சிந்தனைகளில் ஒன்றுபட்டே திகழ்கின்றனர். அஃறிணை உயிராகிய விலங்கு பறவைகளைக் கொன்று அப்புலாலை உண்பது கூடாது எல்லா உயிர்களிலும் இறைவன் உறைந்திருக்கிறான் எனவே உயிர்களைக் கொல்வது என்பது இறைவனைத் தண்டிப்பது போலாகும். என்று எச்சரித்தனர். ஆனால் இன்று மனிதனே மனிதனைக் கொன்று சமைத்து உண்ணும் கொடூர நிலைக்குச் சமுதாயம் போய்க் கொண்டிருப்பதைக் காணலாம். மறுமையில் பேரின்ப வாழ்வு வாழ இம்மையில் செய்ய வேண்டிய ஒழுகலாறுகளை இருவரும் மக்களுக்கு அறிவுறுத்தினர். ஆனால் மறுமை என்ற சிந்தனையேயில்லாமல் சுயநலவாதியாக வாழும் மக்கள் சமூகமே இயங்கி கொண்டிருக்கின்றன. தர்மம் ஆன்மீக வாழ்வுக்கும் சமயச்சார்பற்ற வாழ்வுக்கும் மறுமைக்கும் இன்றிமையாதது என்பதை இருவரும் உணர்த்தினர். திருமூலர் எழுத்தோடு நிற்க வள்ளலார் எழுத்தோடு செயலாக்கத்திலும் ஈடுபட்டார். வள்ளலார் கொள்கையால் கவரப்பட்ட மக்கள் அவரின்*

போதனைகளையே இன்றும் பின்பற்றுகின்றனர். மக்களைத் தீயச் செயல்கள் செய்யத்தூண்டுவது வறுமையே; பசியினால் மனிதன் தன்னை, தன்நிலையை மறந்து தவறான வழியில் சென்று விடுவான் என்பதைத் தடுக்கவே தருமச்சாலையைத் தொடங்கி பசிப்பிணிப்போக்கும் அறத்தைச் செயல்படுத்தினார். இன்றும் செயல்பட்டு வருவது போற்று வதற்குரியது.

திருமூலர், வள்ளலார் மட்டுமின்றி பல ஆன்றோர்கள் அறம் போதித்து மக்களை ஆற்றுப்படுத்த முயன்றுள்ளனர். ஆனால் கலியுகத்தில் மக்களால் அதை முழுமையாக ஏற்றுக் கொண்டு செயல்படுத்த மனமானது ஒத்துழைப்பு நல்கவில்லை என்றே கூறலாம். எல்லோரும் எல்லாம் பெற்று சமத்துவமாக வாழ வேண்டுமென்றால் வைகுண்டசுவாமி கூறியது போல் கலியுகம் அழிந்து தர்மயுகம் மலர வேண்டும் அல்லது பாரதி கூறியது போல மீண்டும் கிரேதாயுகம் தோன்ற வேண்டும் அப்பொது தான் அறம் தழைக்கும் மக்களும் சமத்துவமாய் ஒன்றேகுலம் ஒருவனே தெய்வம்,நன்றும் தீதும் பிறர்தரவாரா என்ற பொது நோக்குடன் வாழ்வர்.

மூலநூல்கள்

1. மாணிக்கவாசகன்,ஞா.(உரையாசிரியர்), திருமூலர் திருமந்திரம், உமாபதிப்பகம், சென்னை, 2013.
2. துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு.(உரையாசிரியர்), திருவருட்பா மூலமும் –உரையும், அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,1990.
3. ஊரன் அடிகள், (பதிப்பாசிரியர்), திருஅருட்பா உரைநடைப்பகுதி, இராமலிங்கர் பணிமன்றம், சென்னை1981.

சான்றெண் விளக்கம்

1. நச்சினார்க்கினியர், (உ.ஆ), பத்துப்பாட்டு (திருமுருகாற்றுப்படை), கேசரிஅச்சுக்கூடம், சென்னை, 1981, பா.வரி.218-219.
2. சுப்பிரமணியன், ச.வே. (ப.ஆ), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்(சிறுபஞ்சமூலம்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2012, பா.51.
3. மேலது, திருக்குறள், பா.51.
4. சோமசுந்தரனார், பொ.வே.,வளையாபதி, கழகவெளியீடு, சென்னை,1970, பா.23.
5. மணி,தா.யசோதரகாவியம் (திறனாய்வு), ராஜேஸ்வரி புத்தகஆலயம், சென்னை, 2009, பா.272.
6. சுப்பிரமணியன், ச.வே.(ப.ஆ), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (திருக்குறள்), மணிவாசகர் பதிப்பகம், சென்னை 2012,பா.226.
7. மாணிக்கனார்,வ.சு.ப(உ.ஆ), ஏழிளந்தமிழ் (ஔவையார்-நல்வழி), காவேரி பதிப்பகம், திருச்சி,2012.பா.26.
8. மணி,ஏ.எஸ்.(தொ.ஆ), இலக்கியகட்டுரைகள்,பாவை பப்ளிக்கேசன்ஸ் வெளயீடு, 2004, ப.44.
9. சீத்தலைச்சாத்தனார், மணிமேகலை(பாத்திரம் பெற்ற காதை), கழகவெளியீடு, சென்னை, 1964, வரி-76-81.
10. திருக்குறள், பா.225.
11. விவேகானந்தன், (உ.ஆ), அகிலத்திரட்டு அம்மானை, தொகுதி-2, விவேகானந்தா பதிப்பகம், ஆசாரிப்பள்ளம்,1991, ப.66.
12. மேலது, தொகுதி-1, பக்43.432.
13. விவேகானந்தன் (உ.ஆ), அருள்நூல், விவேகானந்தா பதிப்பகம், நாகர்கோவில் , 2004, பக்.142,74.
14. அகிலத்திரட்டு அம்மானை, தொகுதி-1, ப.382.
15. பெரியண்ணன், கோ.பாராதியார் கவிதைகள், (விநாயகர் நான்மணிமாலை ) வனிதா பதிப்பகம், சென்னை,2015, பா.39.வரி3-4.

********* ********* ********** ********* ********* ********** ********** **********